# சிறுபாணாற்றுப்படையில் இயற்கைச் சார்ந்த ஐந்நிலமக்களின் வாழ்வியல்

*பா. மாரி (எ) சாரதா*
முழுநேர முனைவர் பட்டஆய்வாளர், தமிழ்த்துறை
சி.எஸ்.ஐ ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி, திருநெல்வேலி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம்
பெற்றகல்லூரி, அபிசேகப்பட்டி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா

*முனைவர் சே. சொர்ணலதா*
நெறியாளர் ரூஉதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சி.எஸ்.ஐ ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி, திருநெல்வேலி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்ற
கல்லூரி, அபிசேகப்பட்டி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/ 10.5281/zenodo.14958655

## முன்னுரை

உலகில் பேசப்படுகின்ற மொழிகளில் பழமையும், தனித்தன்மையும் கொண்டமொழியாகத் தமிழ்மொழி திகழ்வதற்கு அதன் இலக்கணமும், இலக்கியமும் துணைநிற்கின்றன. தமிழில் சங்க இலக்கியப் பாடல்களில் இயற்கைப் பின்புலமாக இருந்துவந்துள்ளதை அறியமுடிகிறது. சங்ககாலப் புலவர்கள் தங்கள் பாடல்களில் மனிதன் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்தவாழ்க்கையும், அவர்கள் இயற்கையைப் பேணிப்பாதுகாத்துப் போற்றிவளர்த்ததன்மையும் பற்றிபதிவிட்டுள்ளதை அறியலாம். மேலும் அவர்கள் இயற்கையைப் பேணி, பாதுகாக்கும் முறையினை உவமைகளாகவும், மேற்கோள்களாகவும், குறியீடுகளாகவும் எடுத்துரைக்கின்றனர்.

## இயற்கை விளக்கம்

இயற்கை என்ற சொல்லிற்கு மதுரைத் தமிழ்ப்பேரகராதி சுபாவம், வழக்கம், இலக்கணம், நிலைமை, கொள்கை, முறைமை, ஏது, குணம், தகுதி, பாக்கியம், இயல்பு, செயற்கைக்கு எதிரானவை என்ற பலப் பொருள்களைத் தருகிறது.

“இயற்கை என்பது ஒரு முழுமையான நிரந்தர இயல்பாகும். மனிதன் இயற்கையைச் சார்ந்து உயிர் வாழ்கிறான். அவன் தனதுவாழ்க்கைத் தேவைகள் அனைத்தையும் இயற்கையிலிருந்து எடுத்துக் கொள்கிறான் இயற்கையை மனிதனின் அங்கம்”[1] என்று அறிஞர் மார்க்ஸ் விளக்குகிறார்.

இயற்கையின் நுட்பங்கள் கணக்கில் அடங்கா. ஒவ்வொரு அறிவியல் கண்டுபிடிப்புகளும், வாழ்க்கைப்பற்றியச் செய்திகளும் மனிதன் இயற்கை பாடமாகவே கற்றுக் கொண்டான். இயற்கையின் வழி நடக்கும் போதே மனிதன் நோய் நொடியற்ற செம்மையான வாழ்வினைப் பெறுகின்றான். இந்த வாழ்வினையும் அறிவியல் திறனையும் சங்ககால மக்கள் கடைப்பிடித்தனர்.

**குறிஞ்சி நிலத்தில் இயற்கை**

குறிஞ்சி நிலத்தில் கருப்பொருள்களின் அடிப்படையில் கிளி, மயில் போன்றவற்றைக் காணமுடிகிறது. அத்தகைய குறிஞ்சி நாட்டுக்குத் தலைவனான நல்லியக்கோடனின் நாட்டில் மயிலானது கருமேகத்தினைக் கண்டுமழை பொழியப் போகின்றது என்ற சந்தோசத்தினால் ஆடிக்களிக்கும் என்பதினை,

**"மணிமயில் கலாபம் மஞ்சு இடைப் பரப்பி"**[2]

***(சிறுபாண் 265 பாடல் வரி)***

என்ற பாடல் உணர்த்துகின்றது. இப்பாடல் மூலம் மயில் ஆடும் இயற்கை நிகழ்வினைக் கண்டுமழைவரப்போகும் வானிலை அறிவை உணர்ந்திருந்தனர் என்பது புலன் ஆகின்றது பொருநராற்றுப்படையில் மயிலானது தோகை விரித்து ஆடிய செய்தியை

**"மடக்கண்ணமயில் ஆல"**[3]

***(பொருநர்.190 பாடல்வரி)***

என்ற பாடல் வரியின் மூலம் அறியமுடிகின்றது.

**முல்லை நிலத்தில் இயற்கை**

முல்லை நிலமக்கள் ஆடு மாடுவளர்த்தல், பால், மோர், தயிர் போன்றவற்றினைவிற்றல் ஆகியவையே தனது முக்கியத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர் நீர்வளம், நிலவளம் மிகுந்த முல்லைப்பகுதிகளில் முல்லை நிலமக்கள் வறுமையான சூழ்நிலையில் அந்த வெப்பம் மிகுந்த குடியில் புளியங்கறி இட்டச் சோற்றினையும், அவர்கள் பசுவைப் போன்றும் அல்லாது மானைப் போன்ற தோற்றம் அல்லாத பெரியகாட்டு விலங்காகிய ஆமானின்(மிளா)சூட்டறைச்சியை உணவாகச் சமைத்து, விருந்தினருக்குக் கொடுத்தும் தானும் உண்ட செய்தியை பின்வரும் பாடல் விளக்குகின்றது.

**"எயிற்றியர் அட்ட இன்புளிவெஞ்சோறு**
**தேமாமேனிச் சில்வளை ஆயமொடு**
**ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர்"**[4]

***(சிறுபாண் 175-177 பாடல்வரிகள்)***

**முல்லை நிலமக்கள் ஆடு**

மாடு போன்றவற்றை வளர்த்தாலும், காட்டு விலங்கை அடித்து உணவாக உட்கொண்ட செய்தியைக் காணமுடிகிறது.

மலை படுகடாம் என்ற நூலில் பொன்னை நறுக்கினாற் போன்ற நுண்ணிய சீரான அரிசியை, வெள்ளை நிறமுடையதாக ஆக்கி, கறித்துண்டுகளை இடையே நெய் விழுதையிட்டு உண்ட செய்தி இடம் பெறுகிறது.

**"பொன் அறைந்தன்னநுண்நேர்அரிசி**
**வெண் எறிந்து இயற்றியமாக் கண் அமலை"**[5]

***(மலைபடுகடாம் 440-441)***

**மருதநிலத்தில் இயற்கை**

உழவுத்தொழிலை முதன்மையாகக் கொண்ட மருத நிலத்தில் இயற்கை அமைப்பு செழித்து இருப்பதற்கு நீர் வளம் இன்றியமையாமையாக அமைகின்றது. மருத நிலமக்கள் வசிக்கும் ஆமூர் நகரை வருணிக்கும் விதமாக மருதநிலத்தில் எவ்வாறு இயற்கை இருந்தது என்பதைச் சிறுபாணாற்றுப் படைகீழ்வருமாறு கூறுகின்றது.

**"நறும்புங் கோதைதொடுத்தநாட்சினைக்**
**குறுங்காற் காஞ்சிக் கொம்பர்சு ஏறி,**
**நிலைஅருள் குட்டம் நோக்கி,நெடிதுஇருந்து,**
**புலவுக் கயலெடுத்தபொன்வாய் மணிச்சிரல்**
**அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு,**
**கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுவிர்"**[6]

***(சிறுபாண் 178-187 பாடல்வரிகள்)***

வழி குறிப்பிடும் போது காஞ்சிமரங்களில் காத்திருந்து கயல்மீனைப் பிடித்த சிச் சிலிப் பறவைபற்றியும், அவ்வுர் சுற்றியுள்ள நீர் நிலைகளில் வெண்தாமரை பு செழித்து வளர்த்து இருந்த தன்மையை அறியமுடிகிறது. மேலும் அம்மக்கள் விருந்தினருக்கு வெண்சோற்றொடு நண்டுக்கறியுடன் பரிமாறிய செய்தியிலிருந்து

மருத நிலமக்கள் இயற்கையோடு அமைந்த வாழ்வை மேற்கூறிய பாடல்வரிகள் உணர்த்துகின்றன.

இதைபோன்றதொரு செய்தி அகநானூறு மருதநிலப் பாடலிலும் இடம்பெறுகின்றது.

**"ஏரி அகைந்தன்னதாமரை இடைஇடை**
**அரிந்துகால் குவித்தசெந்நெல் வினைஞர்**
**கள் கொண்டுமறுகும் சாகாடுஅளற்றுஉறின்**
**ஆய் கரும்பு அடுக்கும்"**[7] ***(அகம் 116: 1-4)***

மேற்கூறியபாடல் வரிகளில் தலைவனின் ஒழுக்கமின்மை சுட்டிக் காட்டப்பட்ட

பொழுதினும் அவன் வாழும் ஊரின் இயற்கைத் தன்மையும் கூறப்படுகின்றது. சேற்றில் புதைந்த வண்டியின் சக்கரத்தினை மீட்க செழுமையான கரும்புக் கட்டுகளை அடைக்கொடுத்தனர் என்பதன் மூலம் இயற்கைச் செழிப்பில் வாழும் தலைவன் அச்செழிப்பில்தான் பரத்ததையரின் ஒழுக்கம் மேற்கொண்டான் என்ற கருத்தும் பதிவு செய்யப்படுகின்றது.

### நெய்தல் நிலத்தில் இயற்கை

மீன்பிடித் தொழிலையும், சூரியனையும் கடல்நீரையும் மூலதனமாக வைத்துச் செய்யும் உப்பளத்தொழிலையும் கொண்ட நெய்தல் நிலமக்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த தன்மையைச் சிறுபாணாற்றுப்படை எடுத்து க்கூறுகின்றது.

***"அலைநீர்த் தாழைஅன்னம் புப்பவும்,***
***தலைநாள் செருந்திதமனியம் மருட்டவும்***
***கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணிகழாஅலவும்,***
***நெடுங்காற் புன்னைநித்தலம் வைப்பவும்,***
***கானல் வெண்மணல் கடல்உலாய் நிமிர்தர,***
***பாடல் சான்றநெய்தல் நெடுவழி,***
***மணிநீர் வைப்புமதிலொடுபெயரிய***
***பணிநீர்ப் படுவின், பட்டினம் படரின்"***[8]

***(சிறுபாண் 146-153 பாடல்வரிகள்)***

தாழை மலர்களாலும், புன்னை மரங்களாலும், உப்பளங்கழிகளாலும் நெய்தல் நிலமக்கள் இயற்கை முறையில் தங்கள் பட்டினத்தை அமைத்திருந்தனர் என்பதை அறியமுடிகின்றது. இதே போன்று அகநானூறு பாடலான,

***"கொளக் குறைபடாஅக் கோடுவளர் குட்டத்து***
***அளப்பு அரிது ஆகியகுவை இருந்தோன்றல"***[9]

***(அகம் 162:1-2)***

இப்பாடலில் கடலின் ஆழமானபகுதியில் விளையும் சங்குகளை கைவினைப் பொருட்களாகச் செய்து அதன்மூலம் வருமானத்தினை மேற்கொண்ட செய்தியினைக் குறிப்பிடுகின்றது. தற்கால மனிதன் இயற்கை அழித்துச் செயற்கையான வணிக வளத்தினைப் பெருக்கி பொருள் ஈட்டுகின்றனர். அவ்வாறு ஈட்டுவதில் இயற்கை மாசு அடைகின்றது. ஆனால் சங்க மக்கள் இயற்கையை எந்தவிதத்திலும் ஊனப்படுத்தாமல் இயற்கைசார் தொழில் மூலம் தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொண்டனர் என்பது புலனாகின்றது.

### பாலை நிலத்தில் இயற்கை

இயற்கையின் மையமான சூரிய வெப்பத்தின் சக்தியைக் குறிப்பிடும் விதமாகப் பாணர்கள், பாலைநிலத்தில் பயணம் செய்யும் செயலைப் பின் வரும் சிறுபாணாற்றுப்படைபாடல்வரிகள் உணர்த்துகின்றன.

**"வெயில் உருப் புற்றவெம்பரல் கிழிப்ப,**
**வேனில் நின்றவெம்பத வழி நான்**
**காலைஞாயிற்றுக் கதிர்கடாவுறுப்ப,**
**பாலைநின்றபாலைநெடுவழிச்**
**சுரன் முதல் மராஅத்தவரிநிழல் அசைஇ"**[10]

***(சிறுபாண். 8-12 பாடல்வரிகள்)***

ஆறுகள் வற்றி அதன் கரையோரம் பும்பொழில் வாடியிருந்ததையும், மேலும் பாணர்களின் நாடோடி வாழ்க்கையில் பாலை நிலத்தில் பயணம் செய்தபோது வெப்பத்தின் தன்மையால் கால்கள் கிழத்து வருந்திய செய்தியையும் மேற்கூறிய பாடல்வரிகள் உணர்த்துகின்றன. அதன் மூலம் சங்க காலமக்கள் எவ்வளவு தான் வெயிலின் கொடுமை அதிகரித்தாலும் இயற்கைக்கு எதிராகதங்கள் கால்களில் காலணியை அவர்கள் அணியவில்லை. இது அவர்கள் இயற்கையோடு எந்த அளவிற்குப் பொருந்தி வாழ்ந்திருக்கிறார்சுகள் என்பதைப் புலப்படுத்துகின்றது.

இதைப்போன்று பொருநராற்றுப்படை பாடலில்

***"அரக்கு உருக்கு அன்னசெந்நிலன் ஒதுங்கலின்***
***பரற்பகை உழந்தநோயொடு சிவணி"***11

***(பாடல்வரிகள் 43-44)***

பாடினியும் வெயிலின் கொடுமை அதிகரித்த போதும் மென்மைத் தன்மைபால் சிறந்த வளானபாடினியும் காலணி அணியவில்லை என்பது சங்கத் தமிழர்களின் இயற்கை வாழ்வியலுக்குச் சிறந்த சான்றாக அமைகின்றது.

## முடிவுரை

சங்க இலக்கியங்கள் கூறும் ஐவகை நிலமக்களும் தங்களின் நில அமைப்பிற்கு ஏற்றவாறு இயற்கை வாழ்வியலை மேற்கொண்டனர். குறிஞ்சி நிலமக்கள் போல் ஆடுவதைக் கண்டும் மழைவரப்போகும் வானியல் அறிவைப் பெற்றிருந்தனர். முல்லை நிலமக்கள் தங்கள் நிலத்தில் அதிகமாகக் கிடைக்கும் காட்டு விலங்குகளையே உணவாகக்கொண்டனர். மருதநில ஆடவர் மக்கள் செழிப்பின் காரணமாக கூடா ஒழுக்கத்தினை மேற்கொண்டனர் அதனால் பாலியல் வன்முறைகள் பரத்தையர் சமூக அமைப்புதடுத்தது. நெய்தல் நிலமக்கள் இயற்கைசார் தொழில்களை மேற்கொண்டு தங்கள் பொருளாதாரதரத்தினை உயர்த்தினர். பாலை நிலமக்கள் அத்தகைய வெயில் தாக்கத்திலும் காலணி அணியாமல் வாழ்ந்திருந்தனர் என்பன போன்ற செய்திகள் இக்கட்டுரையின் முடிவாகப் பெறப்படுகின்றன.

## குறிப்புகள்

1. லாப்தேவ். ஐ., பகுத்தறிவின் கிரஹம் ப.19
2. சிறுபாணாற்றுப்படை 265வது பாடல்வரி
3. பொருநராற்றுப்படை 190 வதுபாடல்வரி
4. சிறுபாணாற்றுப்படை 175-177 வதுபாடல்வரிகள்
5. மலைபடுகடாம் 440-441வது பாடல்வரிகள்
6. சிறுபாணாற்றுப்படை 178-187வது பாடல்வரிகள்
7. அகநானூறு 116ல் 1-4 பாடல்வரிகள்
8. சிறுபாணாற்றுப்படை146-153வது பாடல் வரிகள்
9. அகநானூறு 162ல் 1-2 வதுபாடல்வரிகள்
10. சிறுபாணாற்றுப்படை 8-12 பாடல்வரிகள்
11. பொருநராற்றுப்படை 43-44 பாடல்வரிகள்